1993 ஏப்ரல் 1]

217—

ஓசூரிலுள்ள ஓசூர் புதிய நகர வளர்ச்சிக் குழுமத்திற்கு கூடுதல் அதிகாரம் வழங்கல்.

*10322—திரு. கே. ஏ. மனோகரன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓசூரில் அமைக்கப்பட்டுள்ள HNTDA (Hosur New Town Development Authority) குழுமத்திற்கு கூடுதல் அதிகாரம் வழங்கி திட்டங்களைச் செயல்பட வைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

புதுநகர் வளர்ச்சிக் குழுமம் என்ற வகையில் ஓசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு கூடுதல் அதிகாரங்கள் முன்னமேயே அளிக்கப்பட்டு உள்ளது. கூடுதல் அதிகாரங்கள் தனியே வழங்கத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

கோவில்பட்டியில் 29-3-1993 அன்று விவசாயிகள் நடத்திய பேரணியின்போது இருவர் மரணமடைந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவை த தலைவர் அவர்களே. . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதை நான் எடுத்துக்கொள்ளப் போகிறேன். நீங்கள் வேறு எந்த அறிவிப்பையும கொடுக்கவில்லை. (குறுக்கீடு) நீங்கள் என்ன கொடுக்கப் போகிறீர்கள் என்று தெரியாமல் நான் அனுமதிக்க முடியாது. ஒத்திவைப்புத் தீர்மானம் நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள்